மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம், நட்டம் மற்றும் விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் (“சபை”) பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இருப்பு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,375,228 கூட்டுமொத்த பெறுமதியான எரிபொருள் இருப்பு, இடைச் செருகல் கற்கள் இருப்பு, உடைக்கப்பட்ட சிறிய கற்கள் இருப்பு, தீயணைப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருள் இருப்பு முதலியவற்றின் உள்ளமையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 29,975,094 பெறுமதியான 104 கொடுப்பனவுகளுக்கும் ரூபா 1,713,484 தொகையான செலவுகளுக்குமுரிய கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய துணை ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக அச் செலவுகளை கணக்காய்வின் போது சான்றுறுதி செய்ய முடியாதிருந்தன.

(இ) கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் போது தனியார் வணிக வங்கிகளால் ஐக்கிய குடியரசு டொலர் 24,002,438 தொகையான 4 கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. அக்கடன் மீதியில் ஐக்கிய குடியரசு டொலர் 5,175,774 தொகை 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் கம்பனியால் கடனை மீளச்செலுத்துதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட கடன் மீதியும் வட்டியும் முறையே ஐக்கிய குடியரசு டொலர் 18,826,664 (ரூபா 2,884,810,689) மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 1,737,696 (ரூபா 266,267,314) ஆக இருந்தது.

(ஈ) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,567,188 தொகையான இனங்காணப்படாத செலவு மீதியை உறுதியாக இனங்கண்டு கணக்கீடு செய்யாது மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### விடய முக்கியத்துவம்

எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு காரணமான விடயமாக கவனம் செலுத்தாது கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுத்துக்கொள்ளப்பட்ட தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் தொடர்பான கருதுகோளை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 23 தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளேன்.

## 2.2 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் கட்டளையிடப்பட்டவாறு பின்வரும் விடயங்களைத் தருகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் நோக்கெல்லையும் மற்றும் மட்டுப்படுத்தல்களும் மேலே தரப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து.

- கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும் எனது பரிசோதனைகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டவாறு கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான நாட்குறிப்புக்களின் சரியான தன்மையைப் பரீட்சிப்பதற்காக நாட்குறிப்பு வவுச்சர்களும் துணை ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பிடித்து வைத்தல் வரியாக ரூபா 2,985,798 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் கம்பனியின் 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிக் கொடுப்பனவின் போது மேற்கூறிய தொகையைக் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பெறவேண்டிய பிடித்து வைத்தல் வரியாக ரூபா 2,667,432 தொகையான வரி மீதி கணக்குகளில் காட்டப்பட்டிருந்தும் உரிய பிடித்து வைத்தல் வரிச்சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மேற்கூறிய பிடித்து வைத்தல் வரிப்பணம் வருமான வரிக் கணிப்பின் போது கழித்தல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.

(ஆ) 2014 யூன் 22 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தந்த ஒரு கப்பலுக்கு ஐக்கிய குடியரசு டொலர் 63,500 தொகையான (IFO) 380 எரிபொருள் 102.42 மெட்ரிக் தொன் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் உரிய முகவர் நிறுவனத்தினால் அந்த எரிபொருளுக்கான பணத்தில் ஐக்கிய குடியரசு டொலர் 47,870 கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மிகுதிப் பணமான ஐக்கிய குடியரசு டொலர் 15,630 இற்குச் சமமான ரூபா 2,396,079 பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கம்பனியால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 திசெம்பர்

31 இல் உள்ளவாறு கம்பனியால் மேற்கூறிய முழுக்கடன் மீதிக்காக அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2016/2017 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 4,187,009 ஆக இருந்தது. எவ்வாறாயினும், அப்பணம் செலுத்தப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் 2018 நவம்பர் 05 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.1.1 ஆம் பிரிவு | 03 ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் (Corporate Plan) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 7.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிருவாகக் கட்டமைப்பின் பிரதான பிரிவாக அனைத்து பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்ற செயற்பாட்டுக் கையேடு (Procedure Manual) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறான செயற்பாட்டுக் கையேட்டினைத் தயாரித்திருக்கவில்லை. |
| (iii) 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழு கூடி, உள்ளகக் கணக்காய்வினால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையையும் செயற்பாட்டு நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்குரிய சிபார்சுகளை வழங்க வேண்டிய போதிலும் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காததுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 9.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் ஒவ்வொரு பதவிக்காகவும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் (Scheme of Recruitment) தயாரித்து அதற்கு வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து அதற்கு உரிய தரப்பினர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணைவாக செயல் நடவடிக்கைத் திட்டம் (Action Plan) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2011 நவம்பர் 16 ஆந் திகதிய 24/2011 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை | அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 60 வயதினை மிகைத்து சேவையில் ஈடுபடுத்துவதற்கான தேவை ஏற்படுமாக இருந்தால் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியில் 60 வயதினைப் பூர்த்தி செய்த 08 உத்தியோகத்தர்கள் மேற்கூறிய தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாது சேவையில் ஈடுபட்டிருந்தனர். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 109 மில்லியன் நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 534 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 425 மில்லியன் அல்லது 80 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் போது இருப்புக்களின் நிகர தேறக்கூடிய பெறுமதி ரூபா 585,496,943 இனைக் கணக்கீடு செய்ததன் காரணமாக முன்னைய ஆண்டிற்கான நட்டம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும்,

இலங்கை துறைமுக அதிகார சபை கம்பனிக்கு காலத்துக்கு காலம் ஒப்படைக்கின்ற கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதும் மாகம்புர துறைமுக முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

நவீன சர்வதேச சமுத்திர துறைமுகமாக ஹம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ச துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்.

ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ச துறைமுக எல்லைக்குள் தொழில்நுட்ப வலயத்தை உருவாக்குதல்.

கடற்படை கப்பல்களுக்கு எரிபொருள், நீர் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

அக் குறிக்கோள்களுக்கு மத்தியில் துறைமுக அதிகார சபையின் மூலம் ஒப்படைக்கின்ற கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் மாகம்புர துறைமுக முகாமைத்துவ செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் எஞ்சிய குறிக்கோள்களை வெற்றிகரமாகவும் போதியளவிலும் நிறைவேற்றுவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேரடியாக அமைப்பு புறவிதியில் குறிக்கோளாகக் காட்டப்பட்டிருந்ததும் 2015 ஆம் ஆண்டில் இடைச் செருகல் கொங்ரீட் கற்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அவற்றில் சைனா ஹாபர் பொறியியல் (China Harbour Engineering) கம்பனிக்கு கம்பனியால் ரூபா 25,166,000 தொகைக்கு 506,000 இடைச்செருகல் கொங்ரீட் கற்கள் (Inter Lock) வழங்கப்பட்டிருந்தன. இந்த இடைச் செருகல் கொங்ரீட் கற்கள் உரிய தரத்தினையுடையதாக இல்லாததனால் அக்கற்களில் ஒரு பகுதி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், (China Harbour Engineering) கம்பனிக்கு ரூபா 3,660,000 பணம் கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் போது மீளச் செலுத்தப்பட்டிருந்தது. உரிய தரத்தில்லாது இந்த உற்பத்தியினை மேற்கொண்டதன் காரமாக இந்த நிலை உருவாகியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியால் கம்பனியின் 22 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 436,541 தொகையான 22 நடமாடும் தொலைபேசிகள் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி 30 ஆந் திகதி கம்பனியின் ஊழியர்களை நீக்கும் போது அத் தொலைபேசிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவதத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 15 ஆந் திகதி வரை 16 உத்தியோகத்தர்கள் நடமாடும் தொலைபேசிகளை மீள ஒப்படைத்திருந்ததாக தெரியப்படுத்தியிருந்த போதிலும் ஒரு தொலைபேசி மாத்திரம் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐஎப்ஓ 380 (IFO 380) மற்றும் எம்ஜிஓ (MGO) ஆகிய இரண்டு எரிபொருள் வகைகளின் ஏடுகளில் காட்டப்பட்ட இருப்பு மீதி முறையே 35 மெட்ரிக் தொன் மற்றும் 1,083 மெட்ரிக் தொன்களாகும். கம்பனியின் கப்பல் எரிபொருள் விற்பனைகளை உள்ளடக்கிய செயற்பாட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தும் மேற்கூறிய இருப்புக்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது நிலையான வைப்புக்கள் மீது ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 44,097,112 வட்டி வருமானம் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலாகக் காட்டப்பட வேண்டியிருந்தும் அப் பணம் நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், கம்பனியின் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது சங்கத்தினால் பறிமுதல் செய்த ரூபா 35,563,498 பெறுமதியான கப்பல் எரிபொருள் இருப்புக்கள் வரிக்கு முன்னைய இலாபத்திற்கு செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் அது தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களின் கீழ் இருப்பு மாற்றமாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 464,282 தொகையான வருமானவரிக் கொடுப்பனவுகளை வருமான வரிக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணமாக அப்பெறுமதியால் செலுத்த வேண்டிய வருமான வரிக் கணக்கு அதிகரித்தும் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்கு குறைத்தும் கணிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கம்பனியால் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வீட்டினை மீள ஒப்படைக்கும் பொது மீள அறவிடப்பட வேண்டிய ரூபா 100,000 முற்பணம் அறவிடப்படாதிருந்ததுடன் அது வதிவிடச் செலவுகளாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் 2017 சனவரியிலிருந்து ஒக்தோபர் வரையான காலத்தில் ரூபா 67,091,908 மேலதிக வேலையாகச் செலுத்தப்பட்டிருந்தது. செயற்பாட்டு நடவடிக்கைகள் குறைந்த நிலையில் காணப்பட்டிருந்தும் துறைமுகத்தின் செயற்பாடற்ற பிரிவுகளிலுள்ள ஊழியர்களுக்கு ரூபா 31.7 மில்லியனும் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கி செயற்பாட்டுப் பிரிவின் ஊழியர்களுக்கு ரூபா 3.7 மில்லியனும் செயற்படுகின்ற பிரிவுகளுக்கு ரூபா 17 மில்லியனுக்குமான மேலதிக நேர வேலைகள் செலுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக மேலதி நேர சேவையில் ஈடுபடுவதற்கான தேவைப்பாடு தொடர்பாக கவனத்தில் கொள்ளாது மேலதிக நேர வேலையை அங்கீகரிப்பதற்கும் பணம் செலுத்துவதற்கும் முகாமைத்துவத்தால் கவனயீனமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இம் மேலதிக நேர வேலைகள் கொடுப்பனவுக்குரிய செய்த வேலை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகம்புர துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பனியில் சேவையாற்றுகின்ற அனைத்து பதவியணியினர்களும் கடமைகளுக்கு சமூகமளித்துள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு விரல் அடையாளங்களைப் பதிவு செய்தல் கட்டாயப்படுத்தப்பட்டிருந்த போதிலும், உயர் முகாமைத்துவத்தின் 3 உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்கும் போது விரல் அடையாள இயந்திரங்களைப் பாவித்து வருகையையும் வெளிச் செல்லலையும் பதிவு செய்திருக்கவில்லை.

(இ) கம்பனியின் நிதி ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க உதவிப் பொது முகாமையாராக கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவர் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் ரூபா 50,000 படியின் அடிப்படையில் 2015 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தார். உரிய பணிப்பாளர் சபைக்கூட்ட அறிக்கையின் பிரகாரம் அப்பதவிக்கு பொருத்தமான ஒரு நபரை நியமிக்கும் வரையும் உரிய நியமனம் இடம்பெற்றிருந்தும் அப்பதவிக்கு 2017 திசெம்பர் மாதம் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முடிவுறுத்தும் வரை பொருத்தமான ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 ஆம்

ஆண்டின் போது உரிய ஆலோசகருக்கு ஆறு தடவைகளின் போது ரூபா 287,167 செலுத்தப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனிக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பதவிகள் தொடர்பான சம்பளத் தொகுத்திக்குரிய அடிப்படைச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதைவிடக் கூடிய சம்பளத்தில் உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தமையானது உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 2 பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த 10 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் வரை மனித வளங்கள் திட்டத்திற்கு முரணாக ரூபா 6,795,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இந் நியமனத்தையும் சம்பள மட்டத்தையும் நிர்ணயிப்பதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகம்புர துறைமுக முகாமைத்துவ சேவைகள் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 13 ஆந் திகதியிலிருந்து ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக தொகுதி (தனியார்) கம்பனி (HIPG) மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் (தனியார்) கம்பனிக்கு (HIPG) அப்பதவிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. கம்பனிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட எஞ்சிய கப்பல் எரிபொருள் இருப்புக்களும் 2017 நவம்பர் 27 ஆந் திகதி விற்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலைமையில் மாகம்புர துறைமுக முகாமைத்துவ சேவைகள் கம்பனியில் சேவையாற்றி இழப்பீட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு விலகிச் சென்ற 07 உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பேரில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். மூன்று உதவிப் பொது முகாமையாளர்கள் ஒரு பொறியியலாளர், நிதி முகாமையாளர், வழங்கல் முகாமையாளர், ஆகிய உத்தியோகத்தர்கள் அவர்கள் பெற்ற சம்பளத்தையே செலுத்தும் அடிப்படையில் இவ்வாறு புதிய பதவியில் கம்பனியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களின் நியமன நிபந்தனைகளை உள்ளடக்கும் நியமனக் கடிதம், கடமைப் பட்டியல், சேவைக்குச் சமூகளித்த ஆவணம், செய்த வேலை அறிக்கைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த உத்தியோகத்தர்கள் 2018 பெப்ரவரியிலிருந்து செப்தெம்பர் வரை ரூபா 8,840,669 தொகையை சம்பளமும் படிகளுமாகப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

மேலும், தொழில் திணைக்களத்தின் கொழும்பு தொழில் நீதிமன்றத்தின் 2018 பெப்ரவரி 02 ஆந் திகதிய A/37/2017 ஆம் இலக்க தொழில் நியாயசபை தரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்திய இணக்க உடன்படிக்கையின் 18(அ) இலக்க நிபந்தனைப் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் தொடர்புபட்ட எந்த உத்தியோகத்தருக்கும் சம்பளமோ அல்லது அதனை ஈடு செய்யும் வகையில் எக் கொடுப்பனவோ 2018 சனவரி 31 ஆந் திகதியின் பின்னர் மேற்கொள்வதில்லை என தரப்பினர் இணங்கியிருந்தனர்.

(ஆ) கம்பனியால் உத்தியோகத்தர்கள் சேவையை முடிவுறுத்தியதற்காக இழப்பீடுகளைச் செலுத்தும் போது ரூபா 411,585 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சட்டச் செலவு ரூபா 3,712,245 ஆகும். இச் செலவுகளுக்குள் மாகம்புர துறைமுக முகாமைத்துவக்

கம்பனியின் சட்டத்திரணியாகச் செயற்பட்ட தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 725,000 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியால் சட்டத்தரணியாக மேற்கூறிய உத்தியோகத்தரை நியமித்த முறைமை மற்றும் கொடுப்பனவு நிபந்தனை, கடமைப் பொறுப்புக்கள், அங்கீகாரம் என்பன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் ஊழியர்களை இழப்பீட்னைச் செலுத்தி நீக்கும் போது ஏற்பட்ட பிணக்குகளுடனான நிலைமையை தொழில் திணைக்களத்தின் கொழும்பு தொழில் நீதிமன்றத்தில் 2018 பெப்ரவரி 02 ஆந் திகதிய A/37/2017 ஆம் இலக்க தொழில் நியாய சபை தரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட இணக்க நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இணக்க நிபந்தனையின் 18(ஆ) ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திற்காக நிலுவையான மேலதிக நேர வேலைப்படி மற்றும் அல்லது 2018 சனவரி வரையான நிலுவைச் சம்பளம் செலுத்த வேண்டுமாக இருந்தால் அக் கொடுப்பனவுகள் 2018 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டுமென இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியால் அவ்வாறு இணங்கி கொண்ட நிபந்தனைகளுக்கு முரணாக கம்பனி செயற்பாடற்றுக் காணப்பட்டதன் காரணமாக செலுத்துவதற்கு தகைமையற்ற 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய செயலாற்றல் படி, வாகனப் படி, தங்குமிட படி, மற்றும் போக்குவரத்துச் செலவுப் படியாக ரூபா 12,211,073 செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மகாம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் தாபனக் குறிப்பில் (பதவியணியினர்) உள்ளடக்கப்படாத பிரதி பொது முகாமையாளர் (எரிபொருள் குதங்களின் செயற்பாடு) பதவிக்காக ஒரு உத்தியோகத்தர் 2013 திசெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். கப்பல் எரிபொருள் செயற்பாட்டு நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக இந்த உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் அக் காலத்தின் போது கப்பல் எரிபொருள் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து கம்பனிக்கு ரூபா 1,876,555,819 நட்டம் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த உத்தியோகத்தரை சேவையில் ஈடுபடுத்திய 2013 திசெம்பரிலிருந்து 2016 சனவரி வரையான காலத்தில் செலுத்தப்பட்ட சம்பளங்களும் படிகளும் எரிபொருள் மற்றும் அதிவேக வீதிக் கட்டணம் ரூபா 20,826,983 தொகை சிக்கனமற்ற செலவு என அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பு

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை (1) இன் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு ஆண்டறிக்கையும் கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் 2017 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கையும் கணக்குகளும் 210 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | இருப்புக் கட்டுப்பாடு | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | பெற வேண்டிய மீதிகள் | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |